**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம், கொடைக்கானல்**
**சி.சிஎண்.4 / 2023**
**வழக்கு சாட்சி : PW1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிச்சந்திரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | அர்ச்சுனன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | அசன்கொடை | சமயம் | இந்து |
| தாலுக்கா | கொடைக்கானல் | வயது | 41 |
| தேதி | 08.08.2023 | | |

**( எதிரி ஆஜர் )**

முதல் விசாரணை:

நான் தற்போது அசன்கொடையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கார்த்திகை மாதம் தாண்டிக்குடியில் இருந்து சுமார் 9 பேர் அசன்கொடைக்கு சென்று கொண்டு இருந்தோம். அப்போது மழை அதிகமாக பெய்ததால் மண் சரிவு இழுத்து வந்து கவிழ்த்துவிட்டது. அதில் ஒருவர் மட்டும் இறந்துவிட்டார். பின்னர் தாண்டிக்குடி காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னோம். பின்னர் அவர்கள் வந்தபின்பு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். 8 பேருக்கு அடிபட்டது. பின்னர் அடிபட்ட நபர்கள் 2 மாதம் கழித்து தான் அனைவரும் வந்தார்கள். பின்னர் இது சம்மந்தமாக தாண்டிக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள். புகாரில் என்ன எழுதியிருக்கிறது என்ற முழுவிபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்தானது

மழை பெய்து சகதியில் வண்டி இழுத்து வந்து வண்டி பிரேக் பிடிக்காமல் தான் சகதியில் இழுத்து சென்று விபத்து ஏற்பட்டது என்றாலும் அதற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும் சரிதான். நாங்கள் சென்ற பகுதி ஏற்றமான பகுதி என்றால் சரிதான். அந்த ஏற்றத்தில் தான் வண்டி மேலே ஏறாமல் சகதியால் இழுத்து வந்தது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்து மழை மற்றும் சகதியால் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். புகாரில் வண்டியை ஓட்டி வந்தது தர்மர் மகன் ஈஸ்வரன் தான் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த வண்டி பதிவு எண் தெரியுமா என்றால் TN 59 6022 ஆகும். எனது புகாரில் TN 57 AB 6022 என உள்ளது என்றால் மாற்றி எழுதிவிட்டார்கள்.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2023.08.08 13:28:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC)

கொடைக்கானல்

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம்,**
**கொடைக்கானல்**
**சி.சிஎண்.4 / 2023**
**வழக்கு சாட்சி : PW2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜ் | ஜாதி | |
| தந்தை பெயர் | முருகன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | அசன்கொடை | சமயம் | இந்து |
| தாலுக்கா | கொடைக்கானல் | வயது | 34 |
| தேதி | 08.08.2023 | | |

**( எதிரி ஆஜர் )**
முதல் விசாரணை:

நான் தற்போது அசன்கொடையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். சுமார் ஒரு வருடத்திற்கு முன்னால் நாங்கள் ஜீப்பில் வந்தோம். மழை அதிகமாக பெய்ததால் மண் சரிவு ஏற்பட்டது. அப்போது மேலே ஏறும் பொழுது சகதியால் வண்டி இழுத்து சென்று விபத்து ஏற்பட்டது. பின்னர் தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

விபத்தானது மழை பெய்து சகதியில் வண்டி இழுத்து வந்து வண்டி பிரேக் பிடிக்காமல் தான் சகதியில் இழுத்து சென்று விபத்து ஏற்பட்டது என்றாலும் அதற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும் சரிதான். நாங்கள் சென்ற பகுதி ஏற்றமான பகுதி என்றால் சரிதான். அந்த ஏற்றத்தில் தான் வண்டி மேலே ஏறாமல் சகதியால் இழுத்து வந்தது என்று சொன்னால் சரிதான்.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2023.08.08 13:29:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC)
கொடைக்கானல்

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம், கொடைக்கானல்**
**சி.சிஎண்.4 / 2023**
**வழக்கு சாட்சி : PW3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரத்குமார் | ஜாதி | |
| தந்தை பெயர் | மாரியப்பன் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | அசன்கொடை | சமயம் | இந்து |
| தாலுக்கா | கொடைக்கானல் | வயது | 32 |
| தேதி | 08.08.2023 | | |

**( எதிரி ஆஜர் )**
முதல் விசாரணை:

நான் தற்போது அசன்கொடையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜா் எதிரியைத் தெரியும். தாண்டிக்குடியில் இருந்து அசன்கொடைக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது மழை பெய்து கொண்டு இருந்தது. மேட்டில் ஏறும் பொழுது சகதிக்குள் வண்டி இழுத்துவந்துவிட்டது. இழுத்து வந்து வண்டி பள்ளத்தில் விழுந்துவிட்டது. அனைவரும் கீழே விழுந்துவிட்டோம். அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. பின்னா் தாண்டிக்குடி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அதன்பின்னா் மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். பேரீசாா் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

விபத்தானது மழை பெய்து சகதியில் வண்டி இழுத்து வந்து வண்டி பிரேக் பிடிக்காமல் தான் சகதியில் இழுத்து சென்று விபத்து ஏற்பட்டது என்றாலும் அதற்கு எதிரி காரணம் இல்லை என்றாலும் சரிதான். நாங்கள் சென்ற பகுதி ஏற்றமான பகுதி என்றால் சரிதான். அந்த ஏற்றத்தில் தான் வண்டி மேலே ஏறாமல் சகதியால் இழுத்து வந்தது என்று சொன்னால் சரிதான்.

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2023.08.08 13:29:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC)
கொடைக்கானல்